-----------------------------------------------------------------------------------------------------------

# முக்கிய அம்சங்கள் ஆவணம்

## PMF ∴பைனான்ஸ் பிஎல்சி

-----------------------------------------------------------------------------------------------------------

இந்த ஆவணம் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி இன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் திட்டங்களின் அம்சங்களை கொண்டுள்ளது. எந்த நேரத்திலும் கூறப்பட்ட விதி முறைகள், நிபந்தனைகள் மற்றும் தொடர்புடைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகளில் ஏதேனும் ஒன்றை திருத்த, நீக்க அல்லது சேர்க்க நிறுவனத்திற்கு உரிமை உள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நிதி வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பின் கீழ் தேவைப்படும் வாடிக்கையாளர் தகவல்களுக்காக இந்த முக்கிய அம்சங்கள் ஆவணம் வழங்கப்படுகின்றது.

pmf finance Fixed Deposits

For a Trustworthy Future...



# முக்கிய அம்சங்கள் ஆவணம்

## நிலையான வைப்புகள்

1. **திட்டத்தின் தன்மை**

- PMF ∴பைனான்ஸ் பிஎல்சி இன் நிலையான வைப்பானது உங்களின் உழைத்து சம்பாதித்த பணத்தின் புத்திசாலித்தனமான முதலீட்டிற்கு உகந்த பாதுகாப்பையும் உத்தரவாதமான வருமானத்தையும் உறுதி செய்யும் சிறந்த வழியாகும்.

- எதிர்கால முதலீட்டாளர்கள் 01 மாதம் முதல் 60 மாதங்கள் வரையான காலத்திற்கு நிலையான வைப்புகளை திறக்கலாம்.

- நிலையான வைப்பு வாடிக்கையாளர்கள் ஒரு குறுகிய கால கடன் வசதி அல்லது உத்தரவாத கடிதத்தைப் பெறலாம். இது முதிர்வின் போது வட்டி செலுத்தப்படும் வைப்புகளிற்கு 90% ஆகவும் மாதாந்தம் வட்டி செலுத்தப்படும் வைப்புகளிற்கு 80% ஆகவும் அமையும். இங்கு வசதி ஓன்றுக்கு ஆவணக் கட்டணமாக ரூபா.1500/- அறவிடப்படும்.

2. **நிதி வலிமை மற்றும் பிற நன்மைகள்**

- ஸ்ரேலிங் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் துணை நிறுவனமாகும்.

- 2011 ஆம் ஆண்டின் 42ம் இலக்க நிதி வர்த்தக சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் உரிமம் பெற்ற நிதி நிறுவனம்.

- கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல் இடப்பட்டுள்ளது.

- நிதி சேவைகளில் 40 வருட அனுபவம்

- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

- பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலம் பிரத்தியேக சேவை

- உயாந்தபட்ச பாதுகாப்பு

3. **குறைந்தபட்ச இருப்புத் தேவை, கணக்குத் திறக்கும் கட்டணம், கணக்குப் பரிமாற்றக் கட்டணம் மற்றும் கணக்கு மூடல் கட்டணம்.**

ஆரம்ப கணக்கு வைப்புத் தொகை ரூபா 5000/-. இந்த தொகையானது நிறுவனத்தின் சொந்த விருப்பத்தின் பேரில் அவ்வப்போது மாற்றப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.

4. **வைப்புத் தொகைக்கான காப்புறுதி பாதுகாப்புத் திட்டம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புத் தொகை காப்புறுதித் திட்டத்தில் தகுந்த வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்படுகின்றன. ஒரு வைப்பீட்டாளருக்கு அதிகபட்சமாக ரூபா. 1,100,000/- வரை இழப்பீடு கிடைக்கும்.

5. **பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட நிலையான வைப்பு விண்ணப்பம்.

- முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்) படிவம்.

- தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இவற்றில் ஒன்றின் சான்றளிக்கப்பட்ட உண்மையான பிரதி.

- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள முகவரியில் வாடிக்கையாளர் வசிக்கவில்லையென்றால் நடப்பு அல்லது சேமிப்பு கணக்குக் கூற்றுக்கள்/ நானாவித கொடுப்பனவு ரசீதுகள்/ வாடகை ஒப்பந்தம்/ பொது அதிகார சபையின் கடிதம்

**6. விதி முறைகள்**

- நிர்வாகத்தின் விருப்பப்படி தவிர சான்றிதழில் குறிப்பிட்டப்பட்டுள்ள காலாவதிக் காலத்திற்கு முன் நிரந்தர வைப்புகள் திரும்பப் பெற முடியாது.
- முன் கூட்டியே திரும்பப் பெறப்பட்டால் வட்டி வீதம் சரி செய்யப்படும் மற்றும் சரி செய்யப்பட்ட வட்டி கணக்கிடப்பட்டு வைப்புத் தொகை நிறுவனத்திடம் இருக்கும் காலத்திற்கு மட்டுமே செலுத்தப்படும்.
- முதிர்வுத் திகதிக்கு முன் திரும்பப் பெறுவதற்கான அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறாவிட்டால் வைப்புத் தொகை அதே காலத்திற்கு நடைமுறையில் உள்ள வட்டி வீதத்தில் புதிப்பிக்கப்படும். புதிய வட்டி வீதம் மற்றும் புதிப்பிக்கப்பட்ட தொகையை உறுதிப்படுத்தும் புதிப்பித்தல் அறிவிப்பு இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்படும்.
- வைப்புதாரர்/கள் வைப்பு தொகை மற்றும் திரட்டப்பட்ட வட்டி ஆகியவற்றை பெறுவதற்கு அசல் வைப்புச் சான்றிதழை அதன் பின்புறத்தில் முறையாக புறக்குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும். இது முதிர்ச்சியின் ஏழு நாட்களிற்கு முன்னர் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.
- கூட்டு நிரந்தர வைப்புகளில் எந்தவிதமான மாறான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிராத பட்சத்தில் யாராவது ஒரு வைப்புதாரருக்கு வைப்புத் தொகை மற்றும் அல்லது வட்டி வழங்கப்படுதலானது நிறுவனத்தின் முழுமையான மற்றும் இறுதியான விடுவிப்பாக அமையும். கம்பனியினால் செலுத்தப்படும் கொடுப்பனவிற்கான ரசீதானது கூட்டு வைப்புதாரர்களுக்கு எதிரான, வலிதான மற்றும் போதுமான ஆதாரமாக கொள்ளப்படும்.
- முன்னறிவிப்பின்றி வைப்புகளை திருப்பிச் செலுத்தும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது. சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்தில் வைப்புத் தொகை நிறுவனத்திடம் இருக்கும் காலத்திற்கு வைப்பாளருக்கு வழங்கப்படும்.
- ஒரு கூட்டு வைப்புத் தொகையின் மீது ஒரு பயனாளி நியமனம் செய்யப்பட்டிருந்தால் வைப்புத் தொகையாளர்களில் எவரேனும் ஒருவர் வைப்பு முதிர்ச்சி அடையும் பொழுது உயிருடன் இருந்தால் அத்தகைய நியமனங்கள் செல்லுபடியாகாது.
- ஒரு கூட்டு வைப்பாளரின் மரணத்தின் போது நிறுவனத்தின் பொறுப்பானது எஞ்சி இருப்பவர்/களுக்கு பணம் செலுத்துவதன் மூலம் விடுவிக்கப்படும்.
- தனி உரிமையாளரின் மரணத்தில், நிறுவனத்தின் பொறுப்புகள் பயனாளி/களுக்கு பணம் செலுத்துவதன் மூலம் விடுவிக்கப்படும்.
- வைப்புச் சான்றிதழின் ஏதேனும் இழப்பு அல்லது அழிவு உடனடியாக நிறுவனத்திற்கு சத்தியக் கடதாசி (Affidavit) மற்றும் பொறுப்பு விடுவிப்பு பத்திரம் (Indemnity) என்பவற்றுடன் அறிவிக்கப்படல் வேண்டும்.
- வைப்பு திட்டங்களிற்கு பொருந்தக் கூடிய வட்டி வீதங்கள் எங்களின் அனைத்து கிளைகளிலும் காட்டப்படும். மற்றும் எங்கள் இணையத் தளத்தில் கிடைக்கும்.

**7. நிறுவனத்தின் வலுவில் இல்லாத (inactive) மற்றும் செயலற்ற (dormant) கொள்கை**

செயலற்ற கணக்கு வகைப்பாடானது சட்ட ஒழுங்கு முறை தேவை /வழிகாட்டலுக்கு ஏற்ப வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள் இல்லாமல் கணக்கு பராமரிக்கப்பட்ட காலத்தின் அடிப்படையில் இரண்டு நிலைகளில் செயலற்ற வகைப்பாட்டை நிறுவனம் ஏற்றுக்கொள்ளும்

நிலை 1- கணக்குகளின் வகைப்பாடு “வலுவில் இல்லாதது” (நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு கணக்குகள் இவை இரண்டிற்கும் பொருந்தும்). எல்லா சேமிப்பு கணக்குகளுக்கும் ஒரு வருட காலத்திற்கு மீளப் பெறுகைகள் இல்லாதவிடத்து அவை வலுவில் இல்லாதது எனக் கொள்ளப்படும்.

நிலை 11- கணக்குகளின் வகைப்பாடு “செயலற்றவை” (செயலற்ற கணக்குகள் இலங்கை மத்திய வங்கியின் நியம நடைமுறை ஒழுங்கு முறைகளுக்கு ஏற்புடையதாகும். 10 வருடத்திற்கு மேலாக பரிவர்த்தனை அல்லது கடிதத் தொடர்பு அற்ற கணக்குகள் செயலற்றவை என கருதப்பட்டு 2011ம் வருட நிதி வணிகச் சட்டம் இல.42 இற்கு அமைய இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும்.

**8. அங்கீகரிக்கப்படாத மற்றும் தவறுதலான கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவனத்தின் புகாரைக் கையாளும் நடைமுறைக்கு இந்த ஆவணத்தின் முடிவைப் பார்க்கவும்

A golden opportunity for an intelligent Savings



# முக்கிய அம்சங்கள் ஆவணம்

## சேமிப்பு வைப்புக்கள்

# சாதாரண சேமிப்பு வைப்பு

**1. திட்டத்தின் தன்மை**

PMF ∴பைனான்ஸ் சேமிப்பு ஆனது உங்கள் சேமிப்பு ஆர்வத்திற்கு அதிக வட்டி வீதங்களை வழங்குகின்றது.

வகைகள்: சாதாரண சேமிப்பு, சிறுவர் சேமிப்பு மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்பு

**2. நிதி வலிமை மற்றும் பிற நன்மைகள்**

- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
- தினசரி அடிப்படையிலான வட்டிக் கணக்கீடு
- அதிகபட்ச பாதுகாப்பு
- பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலமான பிரத்தியேக சேவை

**3. குறைந்தபட்ச இருப்புத் தேவை, கணக்குத் திறக்கும் கட்டணம், கணக்குப் பராமரிப்புக் கட்டணம், கணக்கு மூடல் கட்டணம்**

ஆரம்ப வைப்புத் தொகை ரூபா.1000/-. குறைந்தபட்ச தொகையாக ரூபா.1000.00 பராமரிக்கப்பட வேண்டும். நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் இந்த தொகைகள் அவ்வப்போது மாற்றப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்

**4. வைப்புத் தொகைக்கான காப்புறுதி பாதுகாப்புத் திட்டம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புத் தொகை காப்புறுதித் திட்டத்தில் தகுந்த வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்படுகின்றன. ஒரு வைப்பீட்டாளருக்கு அதிகபட்சமாக ரூபா.1,100,000/- வரை இழப்பீடு கிடைக்கும்.

**5. பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கையொப்பமிடப்பட்ட சேமிப்புக் கணக்கு விண்ணப்பம்
- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கையொப்ப அட்டைகள்
- முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் படிவம்).

- தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இவற்றில் ஒன்றின் சான்றளிக்கப்பட்ட உண்மையான பிரதி.

- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள முகவரியில் வாடிக்கையாளர் வசிக்கவில்லையென்றால் நடப்பு அல்லது சேமிப்பு கணக்குக் கூற்றுக்கள்/ நானாவித கொடுப்பனவு ரசீதுகள்/ வாடகை ஒப்பந்தம்/ பொது அதிகார சபையின் கடிதம்

**6. விதி முறைகள் மற்றும் நிபந்தனைகள்**

- சேமிப்புக் கணக்கை திறக்க குறைந்த பட்ச வைப்புத் தொகை உள்ளது. வட்டி வீதம் மற்றும் வட்டியைக் கணக்கிடுதல் மற்றும் வரவு வைக்கும் முறை ஆகியவை PMF ∴பைனான்ஸ் பிஎல்சி இன் உள் கொள்கையின்படி அமையும். நிபந்தனைகள் அல்லது வட்டி வீதத்தில் ஏதேனும் மாற்றங்களை செய்ய அல்லது திருத்தும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளதுடன் இது பொது விளம்பரம் மூலம் அறிவிக்கப்படும்.

- வைப்புத் தொகைகள் எந்தக் கிளையிலும் ஏற்றுக்கொள்ளப்படும், மேலும் இது கணக்கு பராமரிக்கப்படும் கிளைக்கு இலவசமாக மாற்றப்படும்.

- காசோலைகள் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கணக்கு இல...........திரு /திருமதி என எழுதப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். சேமிப்புக் கணக்குகள் காசோலைகளை வரவு வைக்கும் அல்லது மாற்றும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படமாட்டாது.

- கணக்குகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கூட்டு பெயர்களில் திறக்கப்படலாம். மற்றும் இவை அவர்களில் யாராவது ஒருவரால் அல்லது அனைவராலும் இயக்கப்படலாம்.

- சேமிப்புக் கணக்கு புத்தகம் மற்றும் அதனுடன் தே.அ.அட்டை என்பவற்றை சமர்ப்பிப்பதன் மூலம் வைப்பாளார்/கள் பணத்தை மீளப் பெறலாம். மூன்றாம் தரப்பு நபர்களினால் மீளப்பெறல்கள் செய்யப்பட அனுமதிக்கப்பட மாட்டாது.

- PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கிளையை விட்டு வெளியேறும் முன் வாடிக்கையாளர்கள் கணக்குப் புத்தகத்தில் உள்ள பதிவுகள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும். கணணியால் அங்கீகரிக்கப்படாத எந்தத் தொகைக்கும் நிறுவனம் பொறுப்பபேற்க மாட்டாது. சேமிப்பு கணக்குப் புத்தகம், தே.அ.அட்டை மற்றும் வைப்பாளரினால் கையெழுத்து வைத்ததாக கூறப்படும் பணம் மீள் பெறும் படிவம் என்பவற்றின் பேரில் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கொடுப்பனவுகளைச் செய்யும். இது போலியானதாக இருந்தாலும் கம்பனி செலுத்தப்பட்ட தொகை சம்பந்தமாக அது ஒரு நபரின் போலியான அல்லது நேர்மையின்மையாக இருந்தாலும் எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாது.

- கணக்குப் புத்தகம் தொலைந்து அல்லது பழுதடைந்து போனால் திருப்திகரமான விளக்கம், சத்தியக் கடதாசி (affidavit) மற்றும் இழப்பீட்டு உறுதியின் (indemnity) பேரில் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கம்பனி புதிய ஒரு கணக்குப் புத்தகத்தை வழங்கி கணக்கில் உள்ள தொகையை அதற்கு வரவு வைக்கும். இதற்காக ஒரு கட்டணம் வசூலிக்கப்படும்.

- PMF ∴பைனான்ஸ் பிஎல்சி அறக்கட்டளைகளை அங்கீகரிப்பதில்லை

- சேமிப்பு தயாரிப்புகளுக்கு பொருந்தக்கூடிய வட்டி வீதங்கள் எங்கள் அனைத்து கிளைகளிலும் காட்டப்படும் மற்றும் எங்கள் இணையத்தளத்திலும் கிடைக்கும்

**7. நிறுவனத்தின் வலுவில் இல்லாத மற்றும் செயலற்ற கொள்கை**

- சேமிப்புக்கணக்கின் உரிமையாளர் ஒரு வருட காலத்திற்கு நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் எதுவும் செய்யவில்லை என்றால் அந்தக் கணக்கு வலுவில் இல்லாத கணக்காக வகைப்படுத்தப்படும்.
- சேமிப்புக் கணக்கின் உரிமையாளர் பத்து வருட காலத்திற்கு அந்த குறிப்பிட்ட கணக்கு தொடர்பாக நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யவில்லையென்றால், அந்தக் கணக்கு செயலற்ற கணக்காக வகைப்படுத்தப்படும். வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பெயரில் கணக்கு மீண்டும் செயல்படுத்தப்படலாம்.

# சிறுவர் சேமிப்பு வைப்பு

**1. திட;டத்தின் தன்மை**

18 வயதிற்குட்பட்ட குழந்தையின் சார்பாக பெற்றோர் அல்லது சட்டபூர்வ பாதுகாவலரால் இந்தக் கணக்கை திறக்க முடியும்.

**2. நிதி வலிமை மற்றும் பிற நன்மைகள்**

- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
- தினசரி அடிப்படையிலான வட்டிக் கணக்கீடு
- அதிகபட்ச பாதுகாப்பு
- பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலமான பிரத்தியேக சேவை

**3. குறைந்தபட்ச இருப்புத் தேவை, கணக்குத் திறக்கும் கட்டணம், கணக்குப் பராமரிப்புக் கட்டணம், கணக்கு மூடல் கட்டணம்**

ஆரம்ப வைப்புத் தொகை ரூபா. 1000.00, மற்றும் குறைந்தபட்ச தொகையாக ரூபா. 1000.00 பராமரிக்கப்படல் வேண்டும். நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் இந்த தொகைகள் அவ்வப்போது மாற்றப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்

**4. வைப்புத் தொகைக்கான காப்புறுதி பாதுகாப்புத் திட்டம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புத் தொகை காப்புறுதித் திட்டத்தில் தகுந்த வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்படுகின்றன. ஒரு வைப்பீட்டாளருக்கு அதிக பட்சமாக ரூபா. 1,100,000/- வரை இழப்பீடு கிடைக்கும்.

**5. பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

- பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட்ட சிறுவர் சேமிப்பு விண்ணப்பம்.
- பெற்றோர்/பாதுகாவலரால் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் படிவம்).
- குழந்தையின் பிறப்புச் சான்றிதழின் முறையாக சான்றழிக்கப்பட்ட பிரதி
- பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இவற்றில் ஒன்றின் சான்றளிக்கப்பட்ட உண்மையான பிரதி.
- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள முகவரியில் வாடிக்கையாளர் வசிக்கவில்லையென்றால் நடப்பு அல்லது சேமிப்பு கணக்குக் கூற்றுக்கள்/ நானாவித கொடுப்பனவு ரசீதுகள்/ வாடகை ஒப்பந்தம்/ பொது அதிகார சபையின் கடிதம்.

**6. விதி முறைகள் மற்றும் நிபந்தனைகள்**

- சேமிப்புக் கணக்கை திறக்க குறைந்த பட்ச வைப்புத் தொகை உள்ளது. வட்டி வீதம் மற்றும் வட்டியைக் கணக்கிடுதல் மற்றும் வரவு வைக்கும் முறை ஆகியவை PMF ∴பைனான்ஸ் பிஎல்சி இன் உள் கொள்கையின்படி அமையும். நிபந்தனைகள் அல்லது வட்டி வீதத்தில் ஏதேனும் மாற்றங்களை செய்ய அல்லது திருத்தும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளதுடன் இது பொது விளம்பரம் மூலம் அறிவிக்கப்படும்.

- வைப்புத் தொகைகள் எந்தக் கிளையிலும் ஏற்றுக்கொள்ளப்படும், மேலும் இது கணக்கு பராமரிக்கப்படும் கிளைக்கு இலவசமாக மாற்றப்படும்.

- 18 வயதினை எட்டியதும் சிறுவர் சேமிப்புக் கணக்கு தகுந்தபடி சாதாரண சேமிப்புக் கணக்காக மாற்றப்படும்.

- சிறுவர் மற்றும் பெற்றோர்/ பாதுகாவலரின் கையொப்பமிடப்பட்ட வேண்டுகோளின்படி நிறுவனத்தின் விருப்பப்படி செல்லுபடியாகும் ஆவணங்களின் அடிப்படையில் முக்கியமான தேவைகளுக்கு அதாவது கல்வி மற்றும் மருத்துவ செலவிற்கு மட்டுமே மீளப் பெறுதல் அனுமதிக்கப்படும்.

- PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கிளையை விட்டு வெளியேறும் முன் வாடிக்கையாளர்கள் கணக்குப் புத்தகத்தில் உள்ள பதிவுகள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும். கணணியால் அங்கீகரிக்கப்படாத எந்தத் தொகைக்கும் நிறுவனம் பொறுப்பேற்க மாட்டாது.

- கணக்குப் புத்தகம் தொலைந்து அல்லது பழுதடைந்து போனால் பெற்றோர்/ பாதுகாவலரின் திருப்திகரமான விளக்கம், சத்தியக் கடதாசி (Affidavit) மற்றும் பொறுப்பு விடுவிப்பு பத்திரம் (Indemnity) என்பனவற்றின் அடிப்படையில் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கம்பனி ஒரு புதிய கணக்குப் புத்தகத்தை வழங்கும்

## சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்பு வைப்பு

1. **திட்டத்தின் தன்மை**

செல்லுபடியாகும் அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு இலங்கையர் அல்லது வதிவிட விசா வைத்திருப்பவருக்கும் பொருந்தும்.

2. **நிதி வலிமை மற்றும் பிற நன்மைகள்**

- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
- தினசரி அடிப்படையிலான வட்டி கணக்கீடு
- அதிகபட்ச பாதுகாப்பு
- பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலமான பிரத்தியேக சேவை

3. **குறைந்தபட்ச இருப்புத் தேவை, கணக்குத் திறக்கும் கட்டணம், கணக்குப் பராமரிப்புக் கட்டணம், கணக்கு மூடல் கட்டணம்**

ஆரம்ப வைப்புத் தொகை ரூபா 1000.00, குறைந்தபட்ச தொகையாக ரூபா.1000.00 பராமரிக்கப்பட வேண்டும். நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் இந்த தொகைகள் அவ்வப்போது மாற்றப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்

4. **வைப்புத் தொகைக்கான காப்புறுதி பாதுகாப்புத் திட்டம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புத் தொகை காப்புறுதித் திட்டத்தில் தகுந்த வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்படுகின்றன. ஒரு வைப்பீட்டாளருக்கு அதிகபட்சமாக ரூபா 1,100,000/- வரை இழப்பீடு கிடைக்கும்.

## 5. பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கையொப்பமிடப்பட்ட சேமிப்புக் கணக்கு விண்ணப்பம்
- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கையொப்ப அட்டைகள்
- முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் படிவம்).
- தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இவற்றில் ஒன்றின் சான்றளிக்கப்பட்ட உண்மையான பிரதி.
- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள முகவரியில் வாடிக்கையாளர் வசிக்கவில்லையென்றால் நடப்பு அல்லது சேமிப்பு கணக்குக் கூற்றுக்கள்/ நானாவித கொடுப்பனவு ரசீதுகள்/ வாடகை ஒப்பந்தம்/ பொது அதிகார சபையின் கடிதம்

## 6. விதி முறைகள் மற்றும் நிபந்தனைகள்

- சேமிப்புக் கணக்கை திறக்க குறைந்த பட்ச வைப்புத் தொகை உள்ளது. வட்டி வீதம் மற்றும் வட்டியைக் கணக்கிடுதல் மற்றும் வரவு வைக்கும் முறை ஆகியவை PMF ∴பைனான்ஸ் பிஎல்சி இன் உள் கொள்கையின்படி இருக்கும். நிபந்தனைகள் அல்லது வட்டி வீதத்தில் ஏதேனும் மாற்றங்களை செய்ய அல்லது திருத்தும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளதுடன் இது பொது விளம்பரம் மூலம் அறிவிக்கப்படும்.
- வைப்புத் தொகைகள் எந்தக் கிளையிலும் ஏற்றுக்கொள்ளப்படும், மேலும் இது கணக்கு பராமரிக்கப்படும் கிளைக்கு இலவசமாக மாற்றப்படும்.
- காசோலைகள் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி சேமிப்பு கணக்கு இல..........திரு /திருமதி என எழுதப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். சேமிப்புக் கணக்குகள் காசோலைகளை வரவு வைக்கும் அல்லது மாற்றும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படமாட்டாது.
- கணக்குகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கூட்டு பெயர்களில் திறக்கப்படலாம். மற்றும் அவர்களில் யாராவது ஒருவரால் அல்லது அனைவராலும் இயக்கப்படலாம்.
- சேமிப்புக் கணக்கு புத்தகம் மற்றும் அதனுடன் தே.அ.அட்டை என்பவற்றை சமர்ப்பிப்பதன் மூலம் வைப்பாளார்/கள் பணத்தை மீளப் பெறலாம். மூன்றாம் தரப்பு நபர்களினால் மீளப்பெறல்கள் செய்யப்பட அனுமதிக்கப்பட மாட்டாது.
- PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கிளையை விட்டு வெளியேறும் முன் வாடிக்கையாளர்கள் கணக்குப் புத்தகத்தில் உள்ள பதிவுகள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும். கணணியால் அங்கீகரிக்கப்படாத எந்தத் தொகைக்கும் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது. சேமிப்பு கணக்குப் புத்தகம், தே.அ.அட்டை மற்றும் வைப்பாளரினால் கையெழுத்து வைத்ததாக கூறப்படும் பணம் மீளப் பெறும் படிவம் என்பவற்றின் பேரில் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கொடுப்பனவுகளைச் செய்யும். இது போலியானதாக இருந்தாலும் கம்பனி செலுத்தப்பட்ட தொகை சம்பந்தமாக அது ஒரு நபரின் போலியான அல்லது நேர்மையின்மையாக இருந்தாலும் எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாது.

- கணக்குப் புத்தகம் தொலைந்து போனால் அல்லது பழுதடைந்து போனால் திருப்திகரமான விளக்கம், சத்தியக் கடதாசி (Affidavit) மற்றும் பொறுப்பு விடுவிப்பு பத்திரம் (Indemnity) என்பனவற்றின் அடிப்படையில் PMF ∴பைனான்ஸ் பிஎல்சி கம்பனி புதிய ஒரு கணக்குப் புத்தகத்தை வழங்கி கணக்கில் உள்ள தொகையை அதற்கு வரவு வைக்கும்.
- வைப்புச் செய்தவர் இறந்துவிட்டால் கணக்குப் புத்தகம் மற்றும் உரிய ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் மீதித் தொகை பயனாளிக்கு செலுத்தப்படும்.

## 7. நிறுவனத்தின் வலுவில் இல்லாத மற்றும் செயலற்ற கொள்கை

- சேமிப்புக்கணக்கின் உரிமையாளர் ஒரு வருட காலத்திற்கு நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் எதுவும் செய்யவில்லை என்றால் அந்தக் கணக்கு வலுவில் இல்லாத கணக்காக வகைப்படுத்தப்படும்.
- சேமிப்புக் கணக்கின் உரிமையாளர் பத்து வருட காலத்திற்கு அந்த குறிப்பிட்ட கணக்கு தொடர்பாக நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யவில்லையென்றால், அந்தக் கணக்கு செயலற்ற கணக்காக வகைப்படுத்தப்படும். வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பெயரில் கணக்கு மீண்டும் செயல்படுத்தப்படலாம்.




# முக்கிய அம்சங்கள் ஆவணம்

## வாகன குத்தகை

## நான்கு சக்கர வாகன குத்தகை/ கடன்

### 1. திட்டத்தின் முக்கிய அம்சங்கள்/ திட்டத்தின் தன்மை

- புத்தம் புதிய/ மறுசீரமைக்கப்பட்ட/ பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகை வசதிகள்
- இலகுவான ஆவணப்படுத்தல்
- நிறுவனத்துடன் எந்தவொரு முந்தைய தொடர்புகளும் தேவையில்லை.
- நன்கு பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலம் பிரத்தியேக சேவை
- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்.
- ஒரு நாள் சேவை
- உங்கள் வரவு செலவுகளுக்கு ஏற்ப எளிதாக திருப்பிச் செலுத்தும் திட்டம்

### 2. வட்டி வீதங்கள்/ அபராதங்கள்/ பிற வசூலிப்புக்கள் மற்றும் கட்டணங்கள் மற்றும் தரகுகள்.

- வாடிக்கையாளர் இடர் சுயவிவரம் மற்றும் சந்தைப் போக்குகளின் அடிப்படையில் வட்டி **வீதம் ஆண்டுக்கு** 15% - 17% **வரை**.
- வட்டி வீதம் அவ்வப்போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சபை (ALCO) ஆல் அறிவுறுத்தப்படும், மற்றும் நிறுவனத்தின் உத்திகள் மற்றும் சந்தைப் போக்குகளின் அடிப்படையில் மாற்றத்திற்கு உட்பட்டது.
- குத்தகை வசதிகள் மொத்த பெறத்தக்க தொகையில் இருந்து 2% முத்திரை வரிக்கு உட்பட்டது.
- கொடுகடன் தகவல் பணியக (CRIB) கட்டணம் ஒரு வசதிக்கு ரூபா 1500/= ஆகும்.
- ஆவணக் கட்டணங்கள் பின்வருமாறு அமையும்:

| **வசதி தொகை** | **ஆவணக் கட்டணங்கள் (ரூபா)** |
|---|---|
| 200,000 முதல் 999.999 வரை | 6000/= |
| 1,000,000 முதல் 2.499.999 வரை | 8000/= |
| 2,500,000 முதல் 4.999.999 வரை | 10,000/= |
| 5,000,000 மற்றும் அதற்கு மேல் | 12,000/= |

- காப்புறுதி, மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள் (RMV) போன்ற பிற கட்டணங்கள் ஏற்புடையதாகும்
- தண்டனை வட்டி - நிலுவைத் தேதியில் மாதாந்த குத்தகை வாடகையை செலுத்தாத பட்சத்தில் கட்டணம் செலுத்தும் முறையை முறைப்படுத்தும் வரை நிலுவையிலுள்ள மாதாந்த தவணையில் மாதாந்தம் 4.00% காலாவதியான வட்டியை வசூலிக்கும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

### 3. திட்டத்தை பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை

PMF ∴பைனான்ஸ் இலிருந்து வாகனக் குத்தகை/ வாகனக் கடன் திட்டத்தை பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் அருகிலுள்ள கிளையை அணுகவும் அல்லது தொடர்பு கொள்ளவும். கிளைகளின் பட்டியல், அவற்றின் இருப்பிடங்கள் மற்றும் தொடர்பு எண்கள் எங்கள் இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ளன. (https://pmf.lk/en/contact-us/)

**வாடிக்கையாளர் வகையைப் பொறுத்து பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

**<u>தனிநபர்கள்</u>**

- விண்ணப்பதாரர் மற்றும் உத்தரவாததாரர்களின் தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உத்தரவாததாரரின் அறிக்கை
- முன்னோடி விலைப்பட்டியல் (Pro – Forma invoice)
- மதிப்பீட்டு அறிக்கை (Valuation report). (இது புதிய வாகனங்களுக்கு பொருந்தாது)
- பதிவுச் சான்றிதழ் (CR) (பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு)
- வருமான ஆதார ஆவணங்கள் (வங்கி அறிக்கைகள்/ சம்பள உறுதிப்படுத்தல் கடிதம்/ சம்பள தாள்கள் போன்றவை)
- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள முகவரியில் வாடிக்கையாளர் வசிக்கவில்லையென்றால் நடப்பு அல்லது சேமிப்பு கணக்குக் கூற்றுக்கள்/ நானாவித கொடுப்பனவு ரசீதுகள்/ வாடகை ஒப்பந்தம்/ பொது அதிகார சபையின் கடிதம்

**<u>தனிநபர் உரிமையாளர்/ கூட்டாண்மை</u>**

- தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் / உரிமையாளர் / பங்குதாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களின் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உத்தரவாததாரரின் அறிக்கை
- வணிக பதிவு சான்றிதழ்
- வருமான ஆவணங்கள் நிதி அறிக்கைகள் /வங்கி அறிக்கைகள் போன்றவை.
- உரிமையாளர்/ பங்குதாரர்கள்/ உத்தரவாததாரர்களின் சொத்து வெளிப்படுத்துகைகள்
- முன்னோடி விலைப்பட்டியல் (Pro –Forma invoice)
- மதிப்பீட்டு அறிக்கை (Valuation report) ( இது புதிய வாகனங்களுக்கு பொருந்தாது)
- பதிவுச் சான்றிதழ் (CR) (பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு)
- வருமான ஆதார ஆவணங்கள்/ வங்கி அறிக்கைகள்/ சம்பள உறுதிப்படுத்தல் கடிதம்/ சம்பள தாள்கள் போன்றவை
- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள முகவரியில் வாடிக்கையாளர் வசிக்கவில்லையென்றால் நடப்பு அல்லது சேமிப்பு கணக்குக் கூற்றுக்கள்/ நானாவித கொடுப்பனவு ரசீதுகள்/ வாடகை ஒப்பந்தம்/ பொது அதிகார சபையின் கடிதம்

**<u>தனிநபர் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் நிறுவனங்கள்</u>**

- இயக்குனர்கள் மற்றும் உத்தரவாததாரர்களின் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம்
- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உத்தரவாததாரரின் அறிக்கை
- ஒருங்கிணைப்புச் சான்றிதழ் (Certificate of incorporation) (படிவம் 2A - சான்றளிக்கப்பட்ட பிரதி)

- கம்பனியின் அகவிதிகள் (Article of Association) (சான்றளிக்கப்பட்ட பிரதி)
- குத்தகை/ வாகனக் கடன் வசதியைப் பெறுவதற்காக நிறைவேற்றப்பட்ட கம்பனி இயக்குனர் சபையின் தீர்மானங்கள்
- படிவம் 1 அல்லது 40 (இயக்குனர்களின் பெயர் - சான்றளிக்கப்பட்ட பிரதி)
- படிவம் 20 (இயக்குனர்கள்/ செயலாளரின் மாற்றம் இருந்தால் சான்றளிக்கப்பட்ட பிரதி)
- படிவம் 15 (ஆண்டு வருமானம் - சான்றளிக்கப்பட்ட பிரதி)
- படிவம் 13 (வணிக முகவரியில் மாற்றம் இருந்தால்
- வருமான ஆதார ஆவணங்கள் / கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் சமீபத்திய வரைபு கணக்குகள் / வங்கி அறிக்கைகள் போன்றவை.
- முன்னோடி விலைப்பட்டியல் (Pro –Forma invoice)
- மதிப்பீட்டு அறிக்கை (Valuation report) (புதிய வாகனங்கள் தவிர ஏனையவைக்கு)
- பதிவுச் சான்றிதழின் பிரதி (CR) (பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு)
- வருமான ஆதார ஆவணங்கள் (வங்கி அறிக்கைகள்/ சம்பள உறுதிப்படுத்தல் கடிதம்/ சம்பள தாள்கள் போன்றவை)
- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ள முகவரியில் வாடிக்கையாளர் வசிக்கவில்லையென்றால் நடப்பு அல்லது சேமிப்பு கணக்குக் கூற்றுக்கள்/ நானாவித கொடுப்பனவு ரசீதுகள்/ வாடகை ஒப்பந்தம்/ பொது அதிகார சபையின் கடிதம்

## 4. முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

- தனிநபர், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவகம் (SME) மற்றும் பெரு நிறுவன வாடிக்கையாளர்களுக்கு இவ் வசதி உள்ளது.
- தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கையில் வசிக்கும் இலங்கையராக இருக்க வேண்டும்.
- வசதியைப் பெறும் போது குறைந்த பட்சம் 18 வயதுடையவராக இருக்க வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு, 2000 ஆம் ஆண்டு முதல் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்கு குத்தகை மற்றும் வாகனக் கடன் வசதிகளைப் பெறலாம்.
- கார்கள், வேன்கள், SUVகள், இரட்டை வண்டிகள் (Double cab), மிகச்சிறிய ட்ரக்குகள் (Mini Trucks) என்பவற்கு மட்டுமே வாகனக் கடன் வசதியைப் பெறலாம்.
- கார்கள், வேன்கள் SUV கள் இரட்டை வண்டிகள் (Double cab), மோட்டார் லாரிகள், டிரக்குகள்/ தனி வண்டிகள் (Single cabs) மிகச்சிறிய ட்ரக்குகள் (Mini Trucks) என்பவற்றுக்கு குத்தகை வசதிகள் வழங்கப்படலாம்.

## 5. திட்டம் தொடர்பான பொருந்தக்கூடிய சட்ட விதிகள்

- வாகன குத்தகை - 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைச் சட்டம்
- வாகனக் கடன் - 1949 ஆம் ஆண்டின் அடமானச் சட்ட இலக்கம் 6

## 6. வாடிக்கையாளர் புகார்களை கையாளும் நடைமுறை

நிறுவனத்தின் புகார்களை கையாளும் நடைமுறைக்கு இந்த ஆவணத்தின் முடிவைப் பார்க்கவும்

# முச்சக்கர வண்டி குத்தகை

## 1. திட்டத்தின் அம்சங்கள்/ திட்டத்தின் தன்மை

**தகுதியான வாடிக்கையாளர்கள்**

- தனிநபர்கள்
- அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள்
- வணிக நிறுவனங்கள் (தனி உரிமையாளர், கூட்டாண்மை மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள்)

**வாகனங்களின் வகைகள்.**

புத்தம் புதிய மற்றும் பதிவு செய்யப்பட்ட (உற்பத்தி ஆண்டு 2000 க்கு மேல் “G” எண்ணிலிருந்து) பஜாஜ், TVS உற்பத்தி ஆண்டு 2025 க்கு மேல் (“ABU” எண்ணிலிருந்து), மற்றும் பியாஜியோ உற்பத்தி ஆண்டு 2010 “Y” எண்ணிலிருந்து), முச்சக்கர வண்டிகளுக்கு குத்தகை வசதி வழங்கப்படலாம்.

**குத்தகைக்காலம்**

குறைந்தபட்ச காலம் - 12 மாதங்கள்

அதிகபட்ச காலம் - 60 மாதங்கள்.

## 2. வட்டி வீதங்கள்/ அபராதங்கள்/ பிற வசூலிப்புக்கள் மற்றும் கட்டணங்கள் மற்றும் தரகுகள்

- வாடிக்கையாளர் இடர் சுயவிவரம் மற்றும் சந்தைப் போக்குகளின் அடிப்படையில் வட்டி வீதம் ஆண்டுக்கு 25% - 28% வரை.
- வட்டி வீதம் அவ்வப்போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சபை (ALCO) ஆல் அறிவுறுத்தப்படும், மற்றும் நிறுவனத்தின் உத்திகள் மற்றும் சந்தைப் போக்குகளின் அடிப்படையில் மாற்றத்திற்கு உட்பட்டது.
- மொத்த சேவைக் கட்டணம் ரூபா 4000/= (குத்தகை ஒன்றிற்கு ஆவணக் கட்டணம் ரூபா 4000/=, மதிப்பீட்டு கட்டணம் ரூபா 850/=)
- காப்புறுதி, மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள் (RMV) போன்ற பிற கட்டணங்கள் ஏற்புடையதாகும்.
- தண்டனை வட்டி - நிலுவை தேதியில் மாதாந்த குத்தகை வாடகையை செலுத்தாத பட்சத்தில் கட்டணம் செலுத்தும் பாங்கை முறைப்படுத்தும் வரை நிலுவையிலுள்ள மாதாந்த தவணையில் மாதாந்தம் 4.00% காலாவதியான வட்டியை வசூலிக்கும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

## 3. திட்டத்தை பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை

- PMF ∴பைனான்ஸ் இலிருந்து வாகனக் குத்தகை வாகனக் கடன் திட்டத்தை பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் அருகிலுள்ள கிளையை அணுகவும். அல்லது தொடர்பு கொள்ளவும். கிளைகளின் பட்டியல், அவற்றின் இருப்பிடங்கள் மற்றும் தொடர்பு எண்கள் எங்கள் இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ளன. (https://pmf.lk/en/contact-us/)

- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் உத்தரவாததாரர்களின் அறிக்கைகள்.

- விண்ணப்பதாரர் மற்றும் உத்தரவாததாரர்களின் தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

- வாகன விற்பனையாளரின் முன்னோடி அல்லது அசல் விலைப் பட்டியல்.

- பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டி வசதிக்காக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் குழுவிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை (30 நாட்களுக்குள் இருக்க வேண்டும்) பெறப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் குழுவைத் தவிர நிகழ்நிலை (Online) மதிப்பீட்டு அறிக்கையானது நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட மதிப்பீட்டாளர் அறிக்கை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

- பதிவுச் சான்றிதழ் பிரதி (CR)

- உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) படிவம்

- கொடுகடன் தகவல் பணியக (CRIB) அறிக்கை

- தற்போதைய வருமானத்தை உறுதிப்படுத்தும் செல்லுபடியாகும் ஆவணங்கள் அல்லது மீளச் செலுத்தும் திறனை உறுதிப்படுத்தும் ஆவணம் போன்றவை இருந்தால்

**4. முக்கிய விதி முறைகள் மற்றும் நிபந்தனைகள்.**

- தனிநபர் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு இவ்வசதி ஏற்புள்ளது.
- தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கையில் வசிக்கும் இலங்கை குடிமக்களாக இருக்க வேண்டும்.
- வசதியைப் பெறும்போது குறைந்த பட்சம் 18 வயதுடையவராக இருக்க வேண்டும்.

**5. திட்டம் தொடர்பான பொருந்தக்கூடிய சட்ட விதிகள்.**

- 2000 ஆம் ஆண்டிற்கான நிதிக் குத்தகைச் சட்ட எண் 56

**6. வாடிக்கையாளர் புகார்களை கையாளும் நடைமுறை**

- நிறுவனத்தின் புகார்களை கையாளும் நடைமுறைக்கு இந்த ஆவணத்தின் முடிவைப் பார்க்கவும்

# இரு சக்கர வாகன குத்தகை

1. **திட்டத்தின் முக்கிய அம்சங்கள்/ திட்டத்தின் தன்மை**
   - தனிநபர்கள் ( தொழில்முனைவோர் பிரிவில் விவசாயிகள் மற்றும் சுய தொழில் புரிவோர்)
   - அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள் (சம்பளம் பெறுவோர்)
   - வணிக நிறுவனங்கள் (தனி உரிமையாளர், கூட்டாண்மை மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள்)

## வாகனங்களின் வகைகள்

புத்தம் புதிய மின்சார வாகனங்கள்- குறைந்தபட்ச காலம்- 12 மாதங்கள்; அதிகபட்ச காலம்- 36 மாதங்கள்

புத்தம் புதிய மற்றும் பதிவு செய்யப்பட்ட (உற்பத்தி ஆண்டு 2013 முதல்) பஜாஜ், ஹொண்டா, யமஹா, ஹீரோ மற்றும் TVS வாகனங்களுக்கு இரு சக்கர வாகன குத்தகை வசதிகள் உள்ளன.

**வசதிக் காலம்**

குறைந்த காலம் - 12 மாதங்கள்

கூடிய காலம் - 48 மாதங்கள்

| வகை | காலம் |
|---|---|
| புதிய வாகனங்கள் | 48 மாதங்கள் |
| பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் | 2013 முதல் 2016 வரை - 36 மாதங்கள் |
| | 2017ம் & அதற்கு மேல் - 48 மாதங்கள் |

2. **வட்டி வீதங்கள்/ அபராதங்கள்/ பிற வசூலிப்புக்கள் மற்றும் கட்டணங்கள் மற்றும் தரகுகள்.**
   - வாடிக்கையாளர் இடர் சுயவிவரம் மற்றும் சந்தைப் போக்குகளின் அடிப்படையில் வட்டி வீதம் ஆண்டுக்கு 24% - 35% வரை
   - வட்டி வீதம் அவ்வப்போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சபை (ALCO) ஆல் அறிவுறுத்தப்படும், மற்றும் நிறுவனத்தின் உத்திகள் மற்றும் சந்தைப் போக்குகளின் அடிப்படையில் மாற்றத்திற்கு உட்பட்டது.
   - மொத்த சேவைக் கட்டணம் (பதிவு செய்யப்பட்ட வாகனம்)- ரூபா.6300/= (ஆவணக் கட்டணம் ரூபா. 3000/= வசதி ஒன்றுக்கு + மதிப்பீடு கட்டணம் ரூபா. 850/= + CRIB கட்டணம் 1500/- + நிர்வாக கட்டணம் - ரூபா 950/=).
   - மொத்த சேவைக் கட்டணம் (புதிய வாகனம்)- ரூபா.5500/= (ஆவணக் கட்டணம் ரூபா 3000/= வசதி ஒன்றுக்கு + CRIB கட்டணம் ரூபா. 1500/-, நிர்வாக கட்டணம் - ரூபா. 1000/=).
   - காப்புறுதி, மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள் (RMV) போன்ற பிற கட்டணங்கள் ஏற்புடையதாகும்

- தண்டனை வட்டி - நிலுவைத் தேதியில் மாதாந்த குத்தகை வாடகையை செலுத்தாத பட்சத்தில் கட்டணம் செலுத்தும் பாங்கை முறைப்படுத்தும் வரை நிலுவையிலுள்ள மாதாந்த தவணையில் மாதாந்தம் 4.00% காலாவதியான வட்டியை வசூலிக்கும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

### 3. திட்டத்தை பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை

